10th March 1961]

பவர்களுக்கும் இலவசமாக மருத்துவ சலுகை அளிப்பதுபோல் 100 என்று இருப்பதை 300-ஆக மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி யெடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதே மாதிரி சூழ்நிலே நெடுநாளாக இருந்து வருகிறது.

SRI J. MATHA GOWDER: இப்பொழுது திருத்தி அமைக்கப் பட்ட சம்பளத்திலே ஹவுஸ் ரென்ட் அலவன்ஸும் சேர்ந்து மாதம் 100 ரூபாய் சம்பளம் வாங்கும் ஆசிரியர்களுக்கு கஷ்டமாக இருக் காதா ? இப்பொழுது 100 ரூபாய் என்றிருப்பதை 200 ரூபாயாக மாற்றுவதற்கு மறுபரிசீலனே செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: சம்பளத்தில் பேசிக் சம்பளத்தைத்தான் எடுத்துக்கொள்கிறோம்.

SRI S. M. ANNAMALAI : பிரைமரி ஹெல்த் சென்டரிலே கூட்ட பணம் வசூலிக்க அரசாங்கம் உத்திரவு போட்டிருக்கிறார்களா ? பிரைமரி ஹெல்த் சென்டரில் இருப்பவர்கள் வாரத்திற்கு 5 நாட்கள் டூர் செய்ய வேண்டுமென்றிருக்கிறது. ஆகவே சர்க்கார் அந்த பிரைமரி ஹெல்த் சென்டருக்கு விதிவிலக்கு அளிக்க உத்திரவு போடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: பிரைமெரி ஹெல்த் சென்டரில் 6 எமர்ஜன்சி 'பெட்டு'கள் இருக்கின்றன. இது மக்க ளுக்கு 'பிரவென்டிவ் இன்ஸ்டிடுஷனுக' இருக்கிறது அதாவது நோய் வராமல் தடுப்பதற்கு பிரயத்தினம் எடுத்துக்கொள்வதற்கு இருக்கிறது. அப்படி நோய் வந்தால் அதற்கு அங்கே எமர்ஜன்சி பெட்டுகள் இருக்கின்றன. முக்கியமாக நோய் வராமல் தடுப்ப தற்கு தயார் செய்துக்கொள்ளப்படுகிறது.

Nagercoil-Tirunelveli Bus Transport

* 723 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the present stage of the proposal to nationalise the Nagercoil-Tirunelveli Bus Transport?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government have as a policy decided to operate long distance routes, and hence it is not proposed to nationalise short routes like Nagercoil to Tirunelveli.

SRI N. K. PALANISAMI : May I know whether the State Bus Transport Department has applied for permit for this route during 1958 and in spite of that, even after a lapse of two years, the permit is not available. So, will the Government make suitable modifications in the rules relating to the issue of licence so that the first preference should be given to the State Transport Department?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the Governmennt decided in 1957 to take over the Kanyakumari-Nagercoil route. Then according to the decision of the Cabinet, three years' notice was given but meanwhile we have introduced long distance routes—Madras to Bangalore and Madras to Tiruchirappalli, etc. We find that long distance routes are more profitable and more popular and there is greater demand from people to go in for these long-distance routes. Therefore, the Government have decided to go in for long-distance routes and not take up small routes.

SRI M. KALYANASUNDARAM : ஏற்கெனவே சர்க்கார் பஸ் போக்குவரத்து நடந்துக்கொண்டிருக்கிற அந்தப் பகுதியில், பல மார்க்கங்களில் போய்க்கொண்டிருக்கிற காரணத்தினால், இந்த ஒரு மார்க்கத்தில் மாத்திரம் தனியார் ஒருவருக்கு 'மானோபலி'- யாக விடுவது ஆபத்தல்லவா? அந்த அளவிற்கு சர்க்கார் போக்கு வரத்து அந்தப் பகுதியில் தடைப்பட்டுவிடாதா?

THE HON. SRI R. VENKATARAMAN : கன்னியாகுமரி பகுதியிலும் நெடும்தூர பஸ்களை தேசிய மயமாக்குவதற்கு பரிசிலனை செய்தோம். இரண்டையும் ஒரே சமயத்தில் எடுத்துக் கொள்வதற்கு போதிய நிதியும், வசதியும் இல்லை.

SRI K. PERIANNAN : கனம் தலைவர் அவர்களே, இந்த சர்க்காரால் நடத்தப்படுகிற நீண்டதூர பஸ்லே பிரயாணம் செய்கிறவர்களுக்கு வசதி குறைவாக இருக்கிறதென்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் இன்னும் சர்க்கார் நெடும்தூர பஸ்லே பிரயாணம் செய்ய வில்லை போனாலும். அதில் பிரயாணம் செய்துவிட்டு என்னிடம் வந்து சொல்லும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். பல சட்டசபை அங்கத்தினர்களே இதில் பிரயாணம் செய்துவிட்டு இவைகள் நன்றாக இருக்கின்றன வசதியாக இருக்கின்றன, பல இடங்களில் விஸ்தரிக்கவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள்.

Bigamy

* 724 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Government servants who were dismissed from service for bigamy in 1958–59 and 1959–60?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Public interest served by answering the question would not be commensurate with the time and labour involved in collecting the particulars for the answer.

SRI A. A. RASHEED : May I know the number of Government servants who obtained permission from the Government for taking second wife?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not have information about it.